2009 ஜூலை 21] [திரு. ஆ. அருண்மொழிதேவன்]

முற்பகல் 10–00

அதேபோல, வானமாதேவியில் ஆனந்தி என்ற ஒரு பெண்மணி இறந்திருக்கிறார். இந்தத் தீ விபத்துகளுக்கான காரணத்தைக் கண்டறிவதோடு, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதோடு வீடிழந்த அனைவருக்கும் கான்கிரீட் வீடுகள் அமைத்துத் தருவதற்கும் அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஊ) மறைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் சகோதரர் மகனுக்கு விடு ஒதுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரையாது வழங்குவதையே வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கொண்டவர் புரட்சித் தலைவர் அவர்கள். அவருடைய சகோதரர் திரு. சக்ரபாணி அவர்களுடைய மகன் திரு. சந்திரன் அவர்களுக்கு, சென்னையில் வாடகை கொடுத்து வசிக்க முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம், தன்னுடைய மனைவி சித்ரா பெயரிலே வீடு ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கின்றார். அவரால் வாழ்ந்தவர்கள் பலர் இந்த அவையில் இருந்தாலும், அவர்கள் மறந்துவிட்ட போதிலும், 'ஆத்ம நண்பர்' என்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஒரு வீடு ஒதுக்கித் தருவார்களா என்பதனை அறிய விரும்புகிறேன். அதற்குண்டான ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தச் செய்தி குறித்து என்னிடத்திலே எந்த மனுவும் இதுவரையில் தரப்படவில்லை; தரப்பட்டால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.